රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය

**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**

**MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතනය | ෆැක්ස් | ඊ-මේල් | වෙබ් අඩවිය |
|---|---|---|---|
| தொலைபேசி: **(94) 011- 2694560** | தொலைநகல்: **(94) 011- 2692254** | மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** | இணைத்தளம்: **www.pubad.gov.lk** |
| Telephone | Fax | E-mail | Web Site |


---

| මගේ අංකය / எனது இல / My No | ඔබේ අංකය / உமது இல / Your No | දිනය / திகதி / Date |
|---|---|---|
| PA/CS/POLICY/චක්‍රලේඛ | | 2016.04.22 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு.

**<u>இணைந்த சேவைகள் பிரிவின் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரிவுகளின் பணிகளை மறுசீரமைத்தல்</u>**

உயரிய உற்பத்தித்திறனும் வினைத்திறனும் கொண்ட சேவையை அலுவலர்களுக்கு வழங்கும் பொருட்டு இணைந்த சேவைகள் பிரிவின் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரிவுகளின் பணிகள் மறுசீரமைக்கப்படவுள்ளன. அதற்கமைய தேவையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2016.05.13 ஆந் திகதிக்கு முன்னர் அப்பணிகள் யாவும் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

02. அத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் பொருட்டு இணைந்த சேவைகள் பிரிவின் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரிவுகளின் அன்றாட பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, அத்தியாவசியமான அவசர பணிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்படவுள்ளதனால் பணிகளில் தாமதங்கள் ஏற்படலாம். ஆதலால், அக் கால எல்லையில் அப் பிரிவுக்கு கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புக்கள் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளும்படியும், அத்தியாவசியமானதும், அவசரமானதுமான பணிகள் தொடர்பாக மாத்திரம் தொடர்புகொள்ளும் படியும் தயவுடன் அறியத் தருகின்றேன். தயவு செய்து அது தொடர்பாக தங்களது நிறுவனத்தின் கீழ் பணியாற்றுகின்ற அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பது சிறந்ததாகும்.

03. அது தொடர்பாக தாங்கள் செயற்பாட்டு ரீதியான ஒத்துழைப்பை வழங்கும்படி கோருவதுடன், புதிய திட்டங்களின் மூலம் சேவைபெறுநர்களுக்கு மிகவும் சிறந்ததும், வினைத்திறன் வாய்ந்ததுமான சேவையை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதனால், அதன் எதிர்கால பயனாளிகளாக அமையப்போவது இணைந்த சேவைகளைச் சேர்ந்த அலுவலர்களேயாவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**ஒப்பம் / கே.வீ.பீ.எம்.ஜே. கமகே**

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்